# சென்னை மெட்ரோ ரயில்களில் டிசம்பரில் 12.30 லட்சம் பேர் பயணம்

சென்னை

மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது:

கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு கடந்த செப். 7 முதல் சென்னையில் மீண்டும் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது. அதன்படி, செப்டம்பர் மாதத்தில் 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேரும், அக்டோபரில் 7 லட்சத்து 3 ஆயிரத்து 223 பேரும், நவம்பரில் 8 லட்சத்து 58 ஆயிரத்து 546 பேரும், டிசம்பரில் 12 லட்சத்து 30 ஆயிரத்து 484 பேரும் பயணம் செய்துள்ளனர்.

கடந்த மாதம் 21-ம் தேதியில் மட்டும் அதிகபட்சமாக 47 ஆயிரத்து 214 பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர்.

ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு டிசம்பர் மாதம் வரையில் 31 லட்சத்து 52 ஆயிரத்து 446 பேர் பயணித்துள்ளனர். க்யூஆர் குறியீடு பயணச்சீட்டு முறையில் 29 ஆயிரத்து 583 பேரும், பயண அட்டை பயணச்சீட்டு முறையில் 6 லட்சத்து 58 ஆயிரத்து 213 பேரும் பயணித்துள்ளனர்.